சுருக்கம்

வேளாண்மை – வேளாண்மைப் பொறியியல் – உழுவை வாடகைத் திட்டம் – உழுவைகள், மண்தள்ளும் இயந்திரங்கள் மற்றும் கதிர் அறுவடை இயந்திரங்களை இயக்கிட டீசல் தேவை பூர்த்தி செய்ய – ரூ.1,39,69,140/– கூடுதல் நிதி ஒப்பளிப்பு வழங்கி – ஆணை வெளியிடப்படுகிறது.

---

வேளாண்மை (வே.பொ.1) துறை

அரசு ஆணை (1ப) எண். 99

நாள்: 20.05.2019
திருவள்ளுவர் ஆண்டு 2050
விகாரி, வைகாசி 6ம் நாள்
படிக்கப்பட்டவை:

தலைமைப் பொறியாளர் (வே.பொ) கடித எண் .டி.1/ 12855/2018, நாள் 01.11.2018.

---

ஆணை

மேலே படிக்கப்பட்ட கடிதத்தி, நடப்பு நிதியாண்டில் உழுவை வாடகை திட்டத்தின் கீழ், வேளாண்மை பொறியியல் துறையில், 78 எண்கள் மண்தள்ளும் இயந்திரங்கள், 168 எண்கள் உழுவைகள் மற்றும் 48 எண்கள் கதிர் அறுவடை செய்யும் இயந்திரங்கள் இயக்கப்படுகின்றன என்றும் மேற்குறிப்பிட்டுள்ள இயந்திரங்களுக்கு விவசாயிகள் மத்தியில் நல்ல வரவேற்பு இருப்பதால், ஏற்பட்டுள்ள தேவையை (Demand) பூர்த்தி செய்வதற்கு இக்கருவிகளை தொடர்ந்து இயக்க வேண்டியுள்ளது என்றும் இதற்கு HSD ஆயில் (High Speed Diesel) இன்றியமையாத தேவையாகும் என்றும், 2018–19 நடப்பு நிதியாண்டில், மேலே குறிப்பிட்டுள்ள இயந்திரங்களை இயக்கிட டீசல் மற்றும் இதர ஆயில்கள் வாங்கிடுவதற்கான, ரூ.10,57,45,000/– நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என தலைமைப் பொறியாளர் (வேளாண்மைப் பொறியியல்) தெரிவித்துள்ளார்.

2) மேலும், மார்ச் 2019 (31.03.2019 வரை) உழுவை வாடகை திட்டக் கருவிகளை சாதனை குறைவின்றி இயக்கிடுவதற்கு, சமீபகாலங்களில் டீசல் விலை உயர்த்தப்பட்டதால், 2018–19ம் ஆண்டு வரவு செலவு மதிப்பீட்டில் ஒதுக்கப்பட்ட நிதி ஒதுக்கீட்டான ரூ.10,57,45,000க்கும் கூடுதலாக ரூ.6,92,21,820/– தேவைப்படுகிறது என்றும் திருந்திய நிதி ஒதுக்கீட்டில் (R.E. 2018–19) இதர தேவைகளுக்கும் சேர்த்து ரூ.18,99,25,000/– கோரப்பட்டுள்ளது என்றும் தற்பொழுது வடகிழக்கு பருவமழையின் காரணமாக மழை நீர் சூழ்ந்ததால் உபரி நீரை வெளியேற்றுதல் போன்ற நிவாரண பணிகளை முன்னிட்டும், டிசம்பர் 2018 வரை, உழுவை வாடகை திட்டக்கருவிகளை தொய்வின்றி இயக்கிட HSD ஆயில் (High Speed Diesel) வாங்கி இயக்குவதற்கும், இலக்கினை அடையவதற்காகவும், சமீபகாலங்களில் தொடர்ந்து டீசல் விலை உயர்வு ஏற்பட்டதால் அவசர அவசிய தேவைக்காகவும் உடனடியாக ரூ.1,39,69,140/– (ஒரு கோடியே முப்பத்து ஒன்பது லட்சத்து அறுபத்து ஒன்பதாயிரத்து நூற்று நாற்பது மட்டும்) வழங்கிட தலைமைப் பொறியாளர் (வேளாண்மைப் பொறியியல்) கோரியுள்ளார்.

(த.பி.ப)

3) தலைமைப் பொறியாளர் (வேளாண்மைப் பொறியியல்)வின் கருத்துருவினை அரசு நன்கு பரிசீலனை செய்து, உழுவை வாடகை திட்டக்கருவிகளை தொய்வின்றி இயக்கிடவும் இலக்கினை அடைவதற்கும் சமீபகாலங்களில் தொடர்ந்து டீசல் விலை உயர்வு ஏற்பட்டதால் அவசர அவசிய தேவைக்காகவும் உடனடியாக ரூ.1,39,69,140/– (ஒரு கோடியே முப்பத்தி ஒன்பது லட்சத்து அறுபத்து ஒன்பதாயிரத்து நூற்று நாற்பது) மட்டும் வழங்க ஒப்பளிப்பு செய்து அரசு ஆணையிடுகிறது.

4) மேலே பத்தி 3ல் ஒப்பளிப்பு செய்யப்பட்ட தொகை பின்வரும் கணக்குத்தலைப்பில் பற்று வைக்கப்படும்.

2401 00 பயிர்வளர்ப்பு –113 வேளாண்மைப் பொறியியல் – மாநிலச் செலவினங்கள் – AC டிராக்டரை வாடகைக்கு விடும் திட்டம் – 345 பெட்ரோலியம், எண்ணெய் மற்றும் மசகெண்ணை – 01 பெட்ரோலியம், எண்ணெய் மற்றும் மசகெண்ணெய்.
(த.தொ.கு.2401 – 00 – AC - 34501)

5) மேலே பத்தி 3ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் 2019–20ஆம் ஆண்டிற்கான திருத்திய மதிப்பீடு/இறுதித் திருத்த நிதியொதுக்கத்தில் ஒதுக்கீடு செய்யப்படும். அத்தகைய செலவினத்தை எதிர்நோக்கி, மேலே பத்தி 3ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினத்தை மேற்கொள்ள தலைமைப் பொறியாளர் (வேளாண்மை பொறியியல்) அவர்களுக்கு அதிகாரமளிக்கப்படுகிறது. மேலும், இச்செலவினம் 2019–20 – துணை மானியக் கோரிக்கையில் சேர்க்கப்பட்டு, சட்டமன்றப் பேரவையின் கவனத்திற்கு எடுத்துச் செல்லப்பட வேண்டும். இச்செலவினத்தை 2019–20–ம் ஆண்டிற்கான துணை மதிப்பீடுகளில் சேர்ப்பதற்கும் மற்றும் திருத்திய மதிப்பீடு/இறுதித் திருத்த நிதியொதுக்கத்தில் சேர்ப்பதற்கும் ஏதுவாக தனித்தனியாக கருத்துருக்களை உரிய நேரத்தில் நிதி (வ.செ.பொ.1/வேளாண்மை) துறைக்கு அனுப்புமாறு தலைமைப் பொறியாளர் (வேளாண்மை பொறியியல்) அறிவுறுத்தப்படுகிறார்.

6) இவ்வரசாணை நிதித்துறையின் அ.சா.கு.எண். 15834/Agri/2019, நாள் 16.05.2019ன் இசைவுடன் வெளியிடப்படுகிறது. கூடுதல் நிதியொதுக்க பேரேட்டு எண்.181 (நூற்று எண்பத்து ஒன்று)

(ஆளுநரின் ஆணைப்படி )

ககன்தீப் சிங் பேடி
வேளாண்மை உற்பத்தி ஆணையர்
மற்றும் அரசு முதன்மைச் செயலாளர்

பெறுநர்
தலைமைப் பொறியாளர் (வே.பொ.), சென்னை–35.
சம்பளக்கணக்கு அலுவலர், சென்னை–18 (பெயரில்),
சம்பளக்கணக்கு அலுவலர், கிழக்கு, சென்னை–5,
சம்பளக்கணக்கு அலுவலர், தெற்கு, சென்னை–35,
இருப்பிட தணிக்கை அலுவலர், சென்னை–9,

மாநிலக்கணக்காயர் ( G&SSA/E&RSA), சென்னை–18
மாநிலக்கணக்காயர், சென்னை–35,/பெயரில்,

**நகல்**
மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், சென்னை–9,
மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களின் முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை–9,
மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களின் முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை–9,
வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் அரசு முதன்மைச் செயலர் அவர்களின் தனிச் செயலர், சென்னை–9.
நிதி (வேளாண்மை வ.செ.பொ. I மற்றும் II) துறை, சென்னை–9,
உதவி நிரலர், வேளாண்மைத் துறை, சென்னை–9,
வேளாண்மை (அ.ந.மு.3) துறை, சென்னை–9,
உதிரி நகல்/இருப்பு கோப்பு

(ஆணைப்படி அனுப்பப்படுகிறது)

பிரிவு அலுவலர்